## தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

## தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

## தஞ்சாவூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(09.07.2022 முதல் 13.07.2022)

**அறிக்கை எண்: 54/2022** **தேதி: 08.07.2022**

### தஞ்சாவூர் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 34 °செ முதல் 36 °செ ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும் பதிவானது.

### தஞ்சாவூர் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (09.07.2022 முதல் 13.07.2022)

| கடந்த வார வானிலை (05.07.2022 முதல் 07.07.2022) | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலைமுன்னறிவிப்பு (09.07.2022 முதல் 13.07.2022) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 05/07 | நாள்-2 06/07 | நாள்-3 07/07 | தேதி | நாள்-1 09/07 | நாள்-2 10/07 | நாள்-3 11/07 | நாள்-4 12/07 | நாள்-5 13/07 |
| 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 0 | 0 | 0 | 2 | 2 |
| 36 | 34 | 34 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 34 | 34 | 34 | 34 | 34 |
| 27 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 27 | 27 | 27 | 27 | 27 |
| 8 | 8 | 7 | மேகமூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 5 | 5 |
| 73-67 | 69-64 | 72-66 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70-60 | 70-60 | 70-60 | 70-60 | 70-60 |
| 6 | 6 | 6 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 10 | 10 | 10 | 10 | 10 |
| மேற்கு தென் மேற்கு | மேற்கு தென் மேற்கு | மேற்கு வட மேற்கு | காற்றின் திசை | மேற்கு வட மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | தென் மேற்கு |

### தஞ்சாவூர் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். 12.07.2022 மற்றும் 13.07.2022 ஆகிய தினங்களில் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 10 கி.மீ. அளவுக்கு பெரும்பாலும் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

### வேளாண் அறிவுரைகள்

| | |
|---|---|
| பொது | காவேரி டெல்டா பகுதிகளில் வரும் நாட்களுக்கு லேசான மழை பெய்யும் என்பதால் விவசாயிகள் பெறப்படும் மழை அளவை பொருத்து வயல்களுக்கு தண்ணீர் பாய்ச்சவும். |

| | | |
|---|---|---|
| நெல் | | குறுவை குறுகியகால நெற்பயிரில், தூர் கட்டும் பருவத்தில் 1 ஏக்கருக்கு தழைச்சத்து உரமான 32 கிலோ யூரியாவையும் சாம்பல் சத்து உரமான 8.4 கிலோ முரியேட் ஆப் பொட்டாஷ் உரத்தினையும் கலந்து வயலில் சீராக தண்ணீர் வைத்து தூவவும். |
| நெல் | | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக நெற்பயிரில் இலைசிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 2.5 மி.லி. / லிட்டர் அல்லது பெனாஷாகுயின் 10 இ.சி 2 மிலி / லிட்டர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஏக்கருக்கு தெளிக்கவும். |
| கால்நடைகள் | ஆடு மற்றும் மாடு | பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும். |

**குறுஞ்செய்தி**

பருவ மழை தொடங்குவதற்க்கு முன்னர் கால்நடைகளுக்கு கோமாரி நோய்க்கான தடுப்பூசி அளிப்பதனை உறுதி செய்து கொள்ளவும்.

**இயக்குநர்**